# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன் பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
தொலைபேசி: 044-29515590

**ஆணை நாள். 06.07.2026**

**முன்னிலை**

**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA 11654/D/2024**

திரு S.நரசிம்மன் .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் கூடுதல்
நேர்முக உதவியாளர் (நிலம்),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருநெல்வேலி மாவட்டம். .. பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)-ன் கீழ் மனுதாரரின் மனு நாள் | 10.06.2024 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல் முறையீட்டு மனுவின் நாள் | 23.07.2024 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 02.09.2024 |

******

**ஆணை**

இன்று 06.07.2026 முற்பகலில் இவ்வாணையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு S.நரசிம்மன் ஆஜராகவில்லை. ஆணையத்திலிருந்து மனுதாரருக்கு அனுப்பிய அழைப்பாணை “Deceased” என்று அஞ்சல்துறையினரால் குறிப்பிடப்பட்டு ஆணையத்திற்கு திருப்பப்பட்டுள்ளது. இதனை ஆணையம் பதிவு செய்கின்றது. பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத் தகவல் அலுவலர் திருமதி சிவகாசிசுந்தரி, மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருநெல்வேலி மாவட்டம் அவர்கள் மட்டும் நேரில் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் 10.06.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், ஆக்கிரமிப்பு அகற்றும் நிலை குறித்த விவரம் தொடர்பான 5 இனங்களில் தகவல்களைக் கோரி பொது தகவல் அலுவலர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருநெல்வேலி மாவட்டம் அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர், தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 19(1)ன் கீழான 23.07.2024 தேதியிட்ட முதல் மேல்மறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தனக்கு முழுமையான தகவல் வழங்காத காரணத்தால், மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 19(3)ன் கீழான 02.09.2024 தேதியிட்ட தனது இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அம்மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (06.07.2026) நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இந்த ஆணை நிறைவேற்றப்படாமை மனுவினைத் தாக்கல் செய்த மனுதாரர் திரு S.நரசிம்மன் என்பவருக்கு அனுப்பப்பட்ட விசாரணை அறிவிப்புக் கடிதம் "Deceased" என அஞ்சல் துறையினரால் குறிப்பிடப்பட்டு இவ்வாணையத்திற்கே திருப்பியனுப்பப்பட்ட அஞ்சல் உறையைப் பரிசீலிக்கையில், இந்த இரண்டாம் மேல்முறையீட்டின் மனுதாரர் திரு S.நரசிம்மன் இறந்துவிட்டாரென்பது ஏற்றுக் கொள்ளத் தக்கதே என்று ஆணையம் முடிவு செய்கிறது. மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட இவ்வாணை நிறைவேற்றப்படாமை மனுவும் தள்ளுபடி செய்யப்பட வேண்டிய நிலை எழுந்துள்ளது. (It is settled principle of law that, personal action dies with the person concerned (actio personalis moritur cum persona). With the demise of the appellant who filed this second appeal, this appeal will also automatically get dismissed. Hence this second appeal is dismissed.)

4. எனவே, இம்மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

**ஒம்/-(வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்.SA 11654/D/2024**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/
மாவட்ட ஆட்சியரின் கூடுதல்
நேர்முக உதவியாளர் (நிலம்),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திருநெல்வேலி மாவட்டம்.

**<u>மனுதாரர்</u>**
திரு ச.நரசிம்மன்,
த/பெ. திரு சண்முகநாயக்கர்,
க.எண்.6/66-1, ஆத்திகுளம் கிராமம்,
கயத்தார் வட்டம்,
தூத்துக்குடி மாவட்டம் - 628 952.

***Copy to: File***
***VP / PA***